உ

சிவமயம்.

கொத்தமங்கலம்.

மேலைச்சிவன்கோயில்

தோத்திரத்திரட்டு.



அச்சிட்டோர்:-

சுயராஜ்யம் பதிப்பகம்,

சித்தூர்-கொச்சின்.

உ

திருச்சிற்றம்பலம்.

கோத்தமங்கலம்.

மேலைச்சிவன்கோயில்,

தோத்திரத்திரட்டு.

அச்சிட்டோர்,

சுயராஜ்யம் பிரஸ், சித்தூர்-கொச்சின்.

பதிப்புரை.

மேலைச்சிவன்கோயில் தோத்திரத்திரட்டு என்ற இச்சிறு நூல் மேலைச்சிவன் கோயிலில் பல வருடங்களாகச் சிவபூசைசெய்து தொண்டாற்றிவரும் திரு. S. ஏகாம்பரக் குருக்கள் அவர்களின் நன்முயற்சியால் உருவாக்கப்பட்டதாகும். சிவகங்கை ஜமீனுக்கு உட்பட்ட இக் கோயில் கொத்தமங்கலம் நகரத்தார்களால் தொன்றுதொட்டு செவ்வனே கண்காணிக்கப் பட்டு பரிபாலிக்கப்பட்டு வருகிறது. காரைக்குடி மகாவித்வான், சொக்கலிங்கஐயா அவர்களும், புதுக்கோட்டை பண்டித திரு. நா. கனகராஜ ஐயர் B. O. L. அவர்களும் இத்தலத்தைப் புகழ்ந்து பாடியுள்ளனர். அவற்றுள் திரு. நா. கனகராஜ ஐயர் அவர்கள் இயற்றிய பாடல்கள் கொத்தமங்கலம் திரு. சி. சு. சி. வெ. சின்னக்கருப்பன் செட்டியாரது சஷ்டியப்தபூர்த்தி சாந்தி நினைவு வெளியீடாக வெளிவந்திருக்கின்றன. ஆதலின் திரு. சொக்கலிங்க ஐயா பாடிய அருட்பாடல்களை மட்டும் இந்நூலில் திரட்டி வரலாற்றுக் குறிப்புகளுடன் வெளியிட்டிருக்கிறோம். இதரசில தோத்திரப்பாடல்களும் இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

சைவ அன்பர்கள் அனைவரும் இந்நூலை அன்போடு ஏற்றுப்படித்துப் பயன்பெற வேண்டுகிறோம்.

இங்ஙனம்,

15-2-'50. சுயராஜ்யம் பதிப்பகத்தார்,
சித்தூர்-கொச்சின்.

வரலாறு.

பன்னிலூறும் பழத்தினுமின்சுவை
என்னிலூறி எனக்கே களிதரும்
உன்னிலுன்னும் உன்னுவிடில் விட்டிடும்
என்னுளீசன் இருந்த இயற்கையே;

விறகிற் றீயினன் பாலிற்படு நெய்போல்
மறையநின்றுளன் மாமணிச் சோதியான்
உறவுகோல்நட் டுணர்வுக்கயிற்றினால்
முறுகவாங்கிக் கடையமுன் னிற்குமே;

என்ற அப்பரடிகள் திருவாக்கு இறைவன் இயல்பை அறிவிக்கின்றது. மக்களாகிய நாம் மனம் உருகி நினைக்க எளிதில் 'அருளும்பொருட்டுக் கருணையே உருவாக விளங்குகின்ற கண்ணுதற் பெருமான் நேர்ந்த நேர்ந்த இடங்களில் உவந்து எழுந்தருளியிருக்கின்றார். அத்தகைய இடங்கள் இப்பூமியிற் பற்பலவுள்ளன. அவற்றுள்ளே எந் நாட்டிலும் சிறந்த நன்னாடாகிய பாண்டிநாட்டின்கண்ணே திருப்பெருந்துறை, சாக்கை, கண்டதேவி, காளையார்கோவில், குன்றக்குடி, பிரான்மலை, திருமெய்யம் முதலிய அனேக தலங்களால் சூழப்பெற்றதான சூதவன க்ஷேத்திரமும் நடு நாயகமாக விளங்குகின்றது. மாங்குடியாண்டார் கோயில் என்று இனிய தமிழ்ப் பெயர் பெறும் இக்கோயில் தன வணிகச்செல்வர்கள்

தழைத்துவாழும் கொத்தமங்கலத்தைச் சார்ந்த பிரதேசத்திலிணைந்திருப்பதால் அவ்வூர்ப் பெருமக்களால் இனிது போற்றப்பெறுகிறது. புராதனமான இக்கோயிலில் கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், சோபன மண்டபம், விமானம், கோபுரம், இரண்டாம் பிரகார கோபுரம், அலங்கார மண்டபம், முன் மண்டபம், துவஜஸ்தம்பம், சந்நிதி தீர்த்தம், மேல்புறம் தீர்த்தம், நந்தனவனம் முதலிய அனைத்தும் நான்முறைவழுவாது அமைக்கப்பெற்று விளங்குகின்றன. கொத்தமங்கலம் நகரத்தார்கள் இக்கோயிலில் மேற்சொல்லிய திருப்பணியனைத்தையும் செவ்விதின் நிறைவேற்றி சௌமிய வருடம் ஆவணி மீ 14 உ மகா கும்பாபிஷேகம் நிகழ்த்தியுள்ளார்கள். பின்னர் அக்ஷய வருடம் சித்திரை மீ 16 உ யன்றும் விரோதி வருடம் ஆவணி மீ 20 உ யன்றும் கொத்தமங்கலம் நகரத்தார்களாலேயே அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகமும் நடத்தப்பெற்றிருக்கிறது.

கோயிலும் திருவுருவங்களும்.

இங்கு இறைவன் சந்நிதி எல்லா இடங்களிலுமுள்ளது போன்று கிழக்கு முகமாகவும் அம்பிகை சந்நிதி தெற்கு முகமாகவும் உள்ளன. இறைவன் பெயர்

மாங்குடியாண்டான். இப்பெயர் யாவராலும் வழங்கப்பட்டுவருகின்றது. ஸ்ரீதவனஈசுவரர் என்பது அதன் சம்ஸ்கிருத மொழிபெயர்ப்பு. அம்பிகையின் பெயர் சௌந்தரநாயகி. அம்பிகையின் திருவடிவு பெயருக்கேற்ப மிகவும் அழகாயும் பெரியதாயும் இருக்கின்றது. இவ்வளவு அழகான திருவடிவம் வேறெங்குமே காண்டற்கரிது. அம்பிகையின் அழகுதவழும் திருமுகப் பொலிவைக் கண்டாலே மனக்கவலையெல்லாம் தீருமென்று கூறும்படி அவ்வளவு சிறப்புடன் தேவி விளங்குகின்ருள்.

இக்கோயிலிலுள்ள திருவடிவங்களில் நடராஜர் வடிவத்திற்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. அவ்வடிவு இடைக்காலத்திற் செய்யப்பட்டதல்ல. பூமியில் புதைந்திருந்து கண்டெடுக்கப்பெற்ற பழங்காலச் சொக்காகம் அது. அவ்வடிவின் அழகும் பொலிவும் கண்கவர் தன்மையதாகும். சிவகாமி அம்மை, மாணிக்கவாசகர், வடிவங்கள் மட்டும் இடைக்காலத்திற் செய்து சேர்த்து வைக்கப்பெற்றிருக்கின்றன. இக்கோயிலில் விநாயகர், முருகன், தக்ஷிணாமூர்த்தி, வயிரவர், அறுபத்துமூவர், கெஜலெக்ஷ்மி, நவக்கிரகங்கள், சண்டேசர் முதலான அனைத்து மூர்த்திகளும் அமைக்கப் பெற்றுள்ளன. தலவிநாயகர் திருமேனிவினாயகர் என்று அழைக்கப்படுகிருர். ஆறுமுகக் கடவுள் வள்ளி தெய்வானை சமேதராய்க்

காட்சியளிக்கிறார். வயிரவர்சந்நிதி அம்பிகைசந்நிதியின் இடிபால் இருக்கின்றது. வயிரவர் இங்கு மிகவும் வரதான தெய்வம். வயிரவருக்கு இத்தலத்தில் மக்கள் சிரப்பாகவேண்டுதல் முதலியனசெய்துகொண்டு ஆராதனைசெய்து காரிய சித்தி அடைந்துவருவது கண்கூடாக நிகழ்கின்றது. இக்கோயிலில் எழுந்தருள் திருவுருவங்களாக விநாயகர், ஆறுமுகக்கடவுள், சோமாஸ்கந்தர், அம்மை, சண்டேசுரர் முதலிய அனைத்து மூர்த்திகளின் திருவுருவங்களும் உள்ளன.

திருவிழாக்கள்:-

இக்கோயிலில் வருடந்தோறும் பிரம்மோர்சவம் நடப்பதில்லையாயினும் திருவாதிரைத் திருநாளிலும் கந்தர்சஷ்டி நாளிலும் சிறப்பாகத் திருவிழா நடத்தப்படுகின்றது. வருடந்தோறும் இங்கு வருடாபிஷேகம் சிரப்பாக நடத்தப்படுகின்றது. எல்லா விசேஷ தினங்களிலும் சுவாமி திருவுலா வருவதுண்டு. நவராத்திரி 10 நாட்களும் மிகவும் சிரப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

நித்யபூசை:-

தினமும் காலசந்தி உச்சிக்கால பூசை சாயங்கால பூசை அர்த்தயாம பூசை முதலிய பூசைகள் நடைபெறுகின்றன. வேதபாராயணமும் தேவார பாராயணமும் செய்ய ஆட்கள் நியமிக்கப் பெற்றிருக்கிறார்கள். நிறைந்த கல்வி

யறிவும் சிறந்த ஒழுக்கமும் உடையவரான திரு ஏகாம்பர சிவாசாரியாரும் அவருடைய சகோத ரரும் இங்கு பல ஆண்டுகளாக சிவாகம நெறி வழுவாது நித்ய பூசையை இனிது நடத்தி வரு வது தனிச்சிறப்பான செய்தியாய்க் குறிப்பிட வேண்டியதொன்றாகும்.

ஏகாம்பர சிவாசாரியாரின் அறிவின் நிறை வையும் ஆர்வத்துடன் அவர் இனிது செய்யும் பூசையையும் நன்குஉணர்ந்த திரு, நா. கனகராஜ ஐயர் அவர்கள், அவர் பாடிய நான்மணி மாலையில்,

"மறைமொழிபுகன்று மந்திரமோதி
ஆகமநெறியே யருச்சனையியற்றும்
இயல்பினின்வழாத ஏகாம்பரன்"

என்று சிறப்பித்துப் பாடியுள்ளார்.

நிர்வாகம்:-

இக்கோயிலைக் கண்ணேபோல் போற்றி மேற்பார்வை செய்து நடத்திவரும் திரு, சி. சு. குடும்பத்தினரைப் பற்றி எவ்வளவு புகழ்ந் தாலும் மிகையாகாது. நாள்தோறும் தவறாது கோயில்சென்று கோயில் நடைமுறைகளை நேர டியாகப் பார்வையிட்டு செவ்வனே அனைத்தும் நடத்திவரும் இக்குடும்பத்தினரைப் போன்ற தர்மகர்த்தாக்களை மிகவும் அருமையாகவே காண முடியும். இவர்கள் குடும்பத்தில் மிகவும் சிறப் புடன் விளங்கி சமீபத்தில் காலம்சென்ற திரு: சி. சு. சி. வெ. சின்னக்கருப்பன்செட்டியாரின்

திருத்தொண்டும் அவர்காலத்தில் அவர் கோயிலை மேற்பார்வையிட்ட சிறப்பும் இங்கு குறிப்பிடக் கூடியதொன்றாகும். உள்ளூர் நகரத்தார்கள் இக்கோயிலில் வைத்துள்ள பற்றும் அவர்கள் சி. க. குடும்பத்தாருடன் ஒத்துழைத்துக் கோயிலின் நிர்வாகத்தைத் திறம்படச் செய்வதுவரும் மாண்பும் எல்லாவற்றிலும் சிறந்த அம்சங்களாகும்.

பாடல்கள்:-

இக்கோயிலைப்பற்றி திரு, நா. கனகராஜ ஐயர் B. O. L. அவர்கள் இயற்றிய நான்மணி மாலையும் வித்வான் சொக்கலிங்க ஐயா அவர்கள்பாடிய சில அருட்பாடல்களும் தவிர குறிப்பிடத்தக்கனவாய வேறு பாடல்கள் இல்லை.

இத்தலத்தினைப்பற்றி வேறு ஒருவர் பாடிய பாட்டொன்றும் இப்புத்தகத்தில் இடம்பெற்றிருக்கின்றது. அதன் ஆசிரியர் பெயர் அறியக்கூடவில்லை.

குறிப்பு:-

கோயிலுக்குள் எல்லா மூர்த்திகளையும் பாடலால் அருச்சித்து வழிபடுதற்குரிய முறையில் இப்புத்தகத்தில் வேறு சில தோத்திரப் பாடல்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. எல்லாப் பாடல்களும் அன்பர்களுக்குப் பெரிதும் பயன் படுமென்று நம்புகிறோம்.

௨

திருச்சிற்றம்பலம்.



திருமேனி விநாயகர் துதி.

திருமேனி விநாயகநற் றிருநாமம் செபிப்போர்கள்
கருமேனி யினிமேலும் கலவாத கதி வீடு
மருமேன்மை யுறச்சூத வனக்கோயில் மகிழ்ந்தார்வந்
தரும்ஆனை முகநாதன் சரணுளும் சரணுளும்.

சூதவன ஈசுவரர் துதி.

பூமேவு திருமகளு மகன்றனக்கோர்
புணர்காந்தை யென்னுமறைப் பொருளின்வாய்மை
ஓமேவு மரனரியா மான்பெண்ணைம்
உணர்த்திடவு மவன்றனிடமுறவேதாமுன்
மாமேவு மகப்பெறவித் தருள்வோன் கோத்த
மங்கலை வண்பதிசூத வனத்தில்வாழும்
தூமேவு சவுந்தர நாயகி சேர்வாமச்
சூதவன நாதனடி தொழுது வாழ்வாம்

ஓரானை யுரியானை யுரியார்குற்ற
மோரானை யோமுதன்மை யுணர்த்து முண்மைத்
தாரானைத் தமையடைந்தோர் தமக்கோர்தாழ்வும்
தாரானைச்சதுர்மறைகள் சாற்றுஞ்சைவப்
போரானைப் பெருந்தக்கார் பேணுநெஞ்சில்
போரானைப் பெருமானைப் பெறுகையானை
யூரானை உகைப்பானை யொளிர்மாஞ்சோலை
யூரானை யுமைகோனை யுன்னிவாழ்வாம்



சௌந்தர நாயகி துதி.

பூவின்மணா மெனச்சிவனோ டடனும்வாய்மைப்
புனிதையென வரிமனைபாற் புதல்வர்சேய்மை
மேவவுடன் றன்சேய்கள் கோயில் தோறும்
விடையமல னுடனமர்ந்து விளங்குந்தேவி
மாவளரும் தனவணிகர் போற்றும் கொத்த
மங்கல வன்பதி சூத வனத்தில் வாழும்
தாவிலருட் சூத வன நாதன்வாம
சவுந்தர நாயகி மலர்த்தாள் சார்ந்துவாழ்வாம்.

வனத்தாளை வானவரும் வணங்கும் சூத
வனத்தாளை மாதிரங்கமழு மென்கூந்தற்
கனத்தாளைக் கனிதருமக்கவின்செய் ஆவா
கனத்தாளைக் கவுணியற்தக் கசிந்து நல்கும்.
தனத்தாளைத் தனையுணரும் தகையருள்ளா
தனத்தாளைச் சந்ததமும் தனையும் தொண்டர்
இனத்தாளைச் சவுந்தர நாயகியை யம்பொன்
இணைத்தாளை யெப்போதும் ஏத்திவாழ்வாம்

* சகமுழுதாயீன்றளித்த சின்மயவானந்தபரா
சக்தியான
அகமகிழுமருட்சுடரை யனந்தகுணாதீதசுக
அமலவாழ்வை
மகபதியினகந்தையினை யழித்தன்னான் மகிழ்ந்தேத்த
மதிக்கொணாத
சுகமிகு மாங்குடிவாழும் சவுந்தர நாயகிபாதம்
துதித்து வாழ்வாம்

வயிரவர் துதி.

திருவளர் நற்சந்ததிமுற் செல்வமெல்லாம்
திருவடிபோற் றன்பர்குழாம் சேரநல்கி
அருள்வளர்தண் சவுந்தர நாயகியார் வாமத்
தான்ஞான வனநாதன் அமருங்கோயில்
பொருள்வளர் பூசனைவரப் புரியுங்காவற்
புனிதன் வயிரவநாதன் புண்டரீகம்
அருள்வளர் சேவடி நாளும் வணங்கி வாழ்த்தி
மனத்தமைத்தின் பனைத்துமிக மன்னிவாழ்வாம்

* இக்குறியிட்ட பாடல் சொக்கலிங்கஐயா பாடியதல்ல. இது பெயர் தெரியாத ஒருவரால் பாடப் பட்டது. திரு. ஏகாம்பரக் குருக்கள் அவர்கள் எழுதிவைத்திருந்தபடி அச்சிடப்பட்டிருக்கிறது.



தோத்திரப் பாடல்கள்.

முருகன்.

ஆறிருதடந்தோள்வாழ்க ஆறுமுகம்வாழ்கவெற்பைக்
கூறுசெய்தனிவேல்வாழ்க குக்குடம்வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞைவாழ்க யானைதன் அணங்குவாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்க சீரடியாரெல்லாம்.

நடராஜர்.

குனித்தபுருவமும் கொவ்வைச் செவ்வாயிற்
குமின் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற்
பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமும்
காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே யிம்மானிலத்தே.

சிவகாமசுந்தரி.

பாந்தெழுந்த சமண்முதலாம் பரசமயஇருள்நீங்கச்
சிரந்தழுவு சைவநெறித்திருநீற்றினொளிவிளங்க
அரந்தைகெடப்புகலியர் கோனமுதுசெயத்
திருமுலைப்பால்
சுரந்தளித்த சிவகாம சுந்தரிபூங் கழல்போற்றி

தக்ஷிணாமூர்த்தி.

கல்லாலின்புடையமர்ந்து நான்மறையாறங்கமுதற்
கற்றகேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த பூரணமாய்
மறைக்கப்பாலாய்,
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை யிருந்தபடி
யிருந்துகாட்டிச்
சொல்லாமற்சொன்னவரை நினையாமல் நினைந்து பவத்
தொடக்கைவெல்வாம்.

திருநந்திதேவர்.

அங்கணன் கயிலைகாக்கும் அகம்படித் தொழின்மை
பூண்டு
நங்குரு மரபிற் கெல்லாம் முதற்குரு நாதனாகி
பங்கயம் துளவநாறும் வேத்திரப் படை பொறுத்த
செங்கையெம் பெருமானந்தி சீரடிக் கமலம் போற்றி.

நால்வர்.

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்
போற்றி
ஆழிமிசைக்கன்மிதப்பிலணைந்தபிரா னடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாதவூரர் திருத்தாள் போற்றி.

நவக்கிரகங்கள்.

மாரிவழங்கி மதிதோறுமல்கி வளஞ்சுரக்கப்
பாரினுயிர்கள்நலம்பெற நல்வினைபல்கவுன்னிச்
சூரியன் சந்திரன் செவ்வாய் புதன் குரு சுக்கிரனுர்
காரி யரவு சிகிபதம் போற்றுவம் கைகுவித்தே.

சண்டேசுரர்.

பொன்னங் கடுக்கை முடிவேய்ந்த புனிதற்கமைக்கும்
பொருளன்றி
மின்னுங் கலனுடைகள் பிறவும் வேறுதனக்கென்
றமையாமே
மன்னுந் தலைவன் பூசனையின் மல்கும் பயனை
அடியார்கள்
துன்னும்படி பூசனைகொள்ளும் தூயோனடித்தாமரை
தொழுவாம்.

சரஸ்வதி.

பழுதகன்ற நால்வகைச்சொன் மலரெடுத்துப்
பத்திபடப் பரப்பிக் திக்கு
முழுதகன்று மணந்துசுவை பொழுகியணி
பெறமுக்கண் மூர்த்தி தாளில்
தொழுதகன்ற அன்பெனும்நார் தொடுத்தலங்கல்
சூட்டவரிச் சுரும்புந் தேனுங்
கொழுதகன்ற வெண்டோட்டு முண்டகத்தாள்
அடிமுடிமேற் கொண்டு வாழ்வாம்.

Printed at
The Suyarajyam Press, Chittur - Cochin